COURTESY: DINAMANI Dated:07 May, 2016



# ஜெயலலிதாவின் ஐந்தாண்டு கால ஆட்சி - ஒரு மதிப்பீடு

By ஜங்ஷன் - intro | Published on : 07th May 2016 05:33 PM | அ+ அ அ- |



எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் ஜெயலலிதா அரசு மீது சுமத்தும் குற்றங்கள் உண்மைக்கு மாறானவை என்றுதான் தோன்றுகிறது. ஆளும் கட்சியே அரசின் சாதனைகளை மக்களிடம் முறையாக சொல்லவில்லை என்பதுதான் இதில் பெரிய சோகம்.

**ஜெயலலிதா அரசின் ஒரு ஆய்வு இதோ**

***செயல்படுத்தப்பட்ட இலவச திட்டங்கள்***

· வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி

· வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள 3 லட்சம் குடும்பங்களுக்கு பசுமை வீடுகள்

· 12 லட்சம் குடும்பங்களுக்கு மனைப்பட்டா

· 1 கோடியே 63 லட்சம் பயனாளிகளுக்கு மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி.

· பயனாளிகளுக்கு கறவை மாடு அல்லது ஆடு - திட்டத்தின் கீழ் 60 ஆயிரம் மாடுகளும் 28 லட்சம்

· பிரசவத்தின்போது உதவி திட்டத்தின்கீழ் 31 லட்சம் கர்ப்பிணிகளுக்கு நிதி உதவி

· திருமண உதவி திட்டத்தின் கீழ் 8 லட்சம் பெண்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும், 4 கிராம் தங்கமும்.

· 32 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினியும் மற்றும் 31 லட்சம் மாணவர்களுக்கு மிதிவண்டியும்.

· அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஒரு செட் சீருடைக்கு பதில் நான்கு செட் சீருடைகள் மற்றும் புத்தகங்கள், நோட்டுகள், புத்தகப்பை, செருப்பு, உபகரணப்பெட்டி, போன்றவை.

· பள்ளியிலிருந்து நடுவில் நிற்காமல் இருப்பதற்காக 1 கோடி மாணவர்களுக்கு ஊக்கத்தொகை தலா ரூ.5,000.

· 31 லட்சம் விவசாயிகளுக்கு காப்பீட்டு திட்டம்.

· 33 லட்சம் கிராம பெண்களுக்கு ஆண்டுதோறும் சானிடரி நாப்கின்.

**கல்வி**

· புதிதாக தொடங்கப்பட்ட துவக்கப்பள்ளிகள் - 221

· நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டவை - 112

· உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டவை - 810

· மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டவை - 402

· நிரப்பப்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் - 72843

· நிரப்பப்பட்ட ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் - 14711

முந்தைய தி.மு.க. அரசோடு சில புள்ளி விவர ஒப்பீடு:

| விவரம் | 2006-2011 தி.மு.க. அரசு | 2011-2016 அ.தி.மு.க. அரசு |
|---|---|---|
| கல்விக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி | 39058 கோடி | 84568 கோடி |
| உயர்கல்விக்கு ஒதுக்கப்பட்ட நிதி | 6142 கோடி | 14609 கோடி |
| உயர் கல்வி பயில்வோர் சதவீதம் (இந்திய சதவீதம்) | 18% (15%) | 44.8 (23.6%) |
| துவங்கப்பட்ட அரசு கலைக் கல்லூரிகள் | 10 | 39 |
| துவங்கப்பட்ட அரசு பொறியியல் கல்லூரிகள் | 0 | 4 |
| துவங்கப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகள் | 8 | 11 |
| துவங்கப்பட்ட பாடப்பிரிவுகள் | 26 | 959 |
| கட்டடம் கட்ட ஒதுக்கப்பட்ட நிதி | 7 கோடி | 220 கோடி |
| முதல் தலைமுறை பொறியியல் மாணவர்கள் | 78045 | 284609 |
| சிறப்பு பயிற்சி பெற்ற SC/ST மாணவர்கள் | 20626 | 43856 |

கல்விக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் காரணமாக கடந்த ஆண்டுகளில் பள்ளியிறுதி தேர்வுகளில் தேர்வு சதவீதம் அதிகரித்ததுடன் மாநில முதலிடங்களையும் அரசு பள்ளிகள் பெற்றது.

**சுகாதாரம்**

· முதல்வரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் பயன்பெற்றோர் - 13.3 லட்சம்

· அரசு மருத்துவமனைகளில் பயன் பெற்றோர் - 5.4 லட்சம்

· மருத்துவ காப்பீட்டிற்கு அரசு செலவழித்த தொகை - 2759 கோடி.

· அரசு மருத்துவமனைகள் பெற்ற வருமானம் - 1003 கோடி

(முந்தைய மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் தனியார் மருத்துவமனைகள் பயன்பெற்றன)

· புதிதாக துவங்கப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்கள் - 172

· 30 படுக்கை மற்றும் பிறவசதிகளுடன் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார மையங்கள் -122

· பணியமர்த்தப்பட்ட மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் - 14707

விவசாயம், பால், மீன் துறைகளில் ஒப்பீடு:

| விபரம் | 2006-11 தி.மு.க. அரசு | 2011-16 அ.தி.மு.க. அரசு |
|---|---|---|
| விவசாயத்திற்கு ஆன நிதி ஒதுக்கீடு | 7655 கோடி | 23583 கோடி |
| உணவு உற்பத்தி | 76 லட்சம் டன் | 128 லட்சம் டன் |
| நுண்ணீர் பாசன மானிய பயனாளிகள் | - | 1.7 லட்சம் விவசாயிகள் |
| நுண்ணீர் பாசன நிதி ஒதுக்கீடு | - | ரூ. 800 கோடி |
| ஆவின் பால்வள உள்கட்டமைப்பு நிதி ஒதுக்கீடு | 97 கோடி | 593 கோடி |
| தினசரி பால் கொள்முதல் | 20.7 லட்சம் லி. | 29.4 லட்சம் லி. |
| மீன் உற்பத்தி | 28.4 டன் | 32.5 டன் |
| தொலைதூர கடல் மீன்பிடிப்பு படகு கட்ட மானியம் | - | 50% (அதாவது 330 லட்சம்) |

தொழில் துறையில் ஒப்பீடு:

| விபரம் | 2006-11 தி.மு.க. அரசு | 2011-16 அ.தி.மு.க. அரசு |
|---|---|---|
| அன்னிய நேரடி முதலீடு | 2001-11 பத்து ஆண்டுகளில் 30,000 கோடிக்கும் குறைவு | 62522 கோடி |
| பதிவு செய்த சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர் | 1.78 லட்சம் | 5.3 லட்சம் |
| சிறு மற்றும் குறுந்தொழில்களின் முதலீடு | 16000 கோடி | 88000 கோடி |
| புதிதாக தொடங்கப்பட்ட தொழிற் பேட்டைகள் | - | 14 |
| அரசு வேலைகளில் பணியமர்த்தப் பட்டோர் | விபரம் இல்லை | 3.03 லட்சம் |
| வேலை வாய்ப்பு முகாம் மூலம் பணியமர்த்தப் பட்டோர் | விபரம் இல்லை | 1.28 லட்சம் |
| EPF பதிவு செய்தோர் எண்ணிக்கை | 86.5 லட்சம் | 1 கோடியே 95 லட்சம் |
| மின் உற்பத்தி | 8000MW | 15000 MW |

## நெடுஞ்சாலைத் துறை

· ரூ.165 கோடி செலவில் 12 புறவழி சாலைகள்

· ரூ.3000 கோடி செலவில் 1793 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள்

· ரூ.20,000 கோடி செலவில் 48980 கி.மீ. சாலைகள் மேம்பாடு

**மற்ற சாதனைகள்**

· முல்லை பெரியார் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்தியது.

· காவேரி நடுவர் மன்ற ஆணையை அரசிதழில் வெளியிடச் செய்தது.

· சிறு பேருந்துகளை அறிமுகப்படுத்தியது மற்றும் 6500 புதிய பேருந்துகளை வாங்கியது

· மெட்ரோ ரயிலுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கீடு செய்து முதல் கட்ட பணியினை விரைவு செய்தது.

· 8500 கோயில்களில் கும்பாபிஷேகம்

· சென்னை சந்தித்த கடும் வெள்ளத்தில் கால்வாய் கரையோரம் வீடு இழந்தவர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் - 2313 குடும்பங்களுக்கு குடியிருப்பு வழங்கப்பட்டது.

· சென்னை கடும் வெள்ளம் காரணமாக, பெரிய சுகாதாரப் பிரச்சனைகள் வராமல் நடவடிக்கை எடுத்ததும் அதற்காக மத்திய குழுவின் பாராட்டு பெற்றதும்.

· எளியோர்க்கு பயன்படும் அம்மா உணவகங்கள், அம்மா குடிநீர் போன்றவை

· காணொலி காட்சியின் மூலம் அரசு விழாக்களை நடத்தி அரசுக்கு பலகோடி ரூபாய்களை மிச்சப்படுத்தியது.

<u>சட்டம் ஒழுங்கு:</u>

| விபரம் | 2010 | 2013 |
|---|---|---|
| வரதட்சணை கொலைகள் | 165 | 118 |
| பாலியல் கொடுமை வழக்குகள் | 638 | 313 |
| கற்பழிப்பு வழக்குகள் | 1405 | 1271 |
| லட்சம் ஜனத்தொகைக்கு குற்றங்கள் | 277 | 242 |

மதுவினால் அரசுக்கு வரும் வருமானம் குடிப்பவர் பெருகியதால் ஏற்பட்ட வருமானம்போல் பேசப்படுகிறது. இது தவறு. தனியாருக்கு போய்க்கொண்டிருந்த வருவாயை, அரசே மது விற்பனையை ஏற்று நடத்தியதால் அரசுக்கு வருமானம் 10,000 கோடி ரூபாயிலிருந்து சுமார் 25,000 கோடியாக உயர்ந்தது. இதை கொச்சைப்படுத்தும் விதமாக கோவன் போன்றவர்கள் ஜெயலலிதாவே மதுவை ஊற்றிக்கொடுப்பது போல வீடியோ வெளியிட்டால் அதற்கு பெயரா கருத்து சுதந்திரம்?

கருணாநிதி, தான் சந்தித்த ஒரே வழக்கான சர்க்காரியா வழக்கையே மொரார்ஜி தேசாயிடம் வாபஸ் பெற வற்புறுத்தியவர். ஜெயலலிதா மீது போடப்பட்ட 14 வழக்குகளில் அத்தனையும் நீதிமன்றத்தில் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2ஜி விற்பனையில் முறைகேடுகள் காரணமாக தி.மு.க. அமைச்சர், நடுவண் அரசுக்கு பெற்றுத்தந்த வருமானம் ரூ.10,000 கோடி தான். ஆனால் 3 ஜி விற்பனையில் ஏலம் மூலம் அரசுக்கு வந்த வருமானம் ரூ.1 லட்சம் கோடி. மத்திய அரசுக்கு ஏற்பட்ட இந்த நட்டம் குறித்து தி.மு.க. மக்களிடம் விளக்க வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில், போலீஸ் வேடிக்கை பார்க்க சட்ட கல்லூரி மாணவர்கள் கொலைவெறித் தாக்குதலில் 12.11.2008 அன்று ஈடுபட்டதையும், நீதிமன்ற வளாகத்தில் 19.11.200 அன்று போலீசாருக்கும் வழக்கறிஞர்களுக்கும் ஏற்பட்ட பெரிய கலவரத்தையும் இந்த தருணத்தில் நினைவுகூர்தல் நன்று.

ஜெயலலிதா மீது தனிநபர் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் அரசின் செயல்பாடுகளை குறைத்து மதிப்பிடுவது நியாயமற்றது. புதிதாக பொறுப்பேற்கும் எந்த அரசும் அ.தி.மு.க. அரசு உள்பட, மேற்சொன்ன புள்ளி விவரங்களை அடிப்படையாக வைத்தே செயல்பட வேண்டியிருக்கும். மேற்சொன்ன மதிப்பீட்டுக்கு உள்ளாக வேண்டியிருக்கும். ஜெயலலிதா தன் செயல்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டியவர். சந்தேகம் இல்லை. ஆனால் நல்லெண்ணம் கொண்டவர். சில சாதனைகளை நிகழ்த்தி இருப்பவர். தன் குடும்பத்தை அரசியலில் நிலைநிறுத்திக்கொள்ள ஏற்றவாறு செயல்படும் கருணாநிதி நிச்சயம் ஜெயலலிதாவுக்கு மாற்று அல்ல.

ஒரு வேளை ஜெயலலிதா வேண்டாம் என்று வாக்காளர்கள் முடிவெடுத்தால் பொருத்தமானவர் அன்புமணியோ அல்லது மற்றவரோ அன்றி நிச்சயமாக கருணாநிதி அல்ல.



**ரா. கணேசன் B.E., (Hons), M.E.,**

**மேலும் செய்திகளை உடனுக்குடன் படிக்க, தினமணி மொபைல் ஆப்-ஐ இங்கே கிளிக் செய்து தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள்!**